**கவனிக்க.-** *26.07.2024 ஆந் திகதிய 2395 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2392 - 2024 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2024.08.02**

*2392 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 328 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 329 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2024, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


327 - B 82594 - 353 (2023/08)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

மகாவலி அதிகார சபை, பொலன்னறுவை மாவட்டம், திம்புலாகலை பிரதேச செயலாளர் பிரிவு மகாவலி C வலயத்தின் வதிவிட திட்ட முகாமையாளர் பாடி கமகே நொயெல் ஜயசிறி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் துணை பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2017.03.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள PO/C/SIRI/D/31243 (மேட்டு) ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான இல. 30, ரத்மள்கண்டிய, தெஹிஅத்தகண்டிய எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்செலாகே ஜயதிலக்க பண்டார என்பவருக்கு வழங்கப்பட்டு பொலன்னறுவை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் LDO/J/59/20 ஆம் இலத்தின் கீழ் 2018.05.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் துணை அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளர் ஆவதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமைக்காரர் ஆவதற்கு விருப்பம் இல்லாமை காரணமாக பின்னுரிமைத்துவத்திற்கு நியமிப்பதற்கு ஒருவர் இல்லை என்று அறிக்கை இடப்பட்டிருப்பதானால் மேற்கூறப்பட்ட அளிப்பு பத்திரத்தினை மேற்காணும் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால் அதுபற்றி 2024.08.23 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்தில் திம்புலாகலை பிரதேச செயலாளர் பிரிவின் எகொடபத்து/கோரளை முந்துன்கம கிராம சேவையாளர் பிரிவின் ரத்மள்கண்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவரது பொறுப்பில் இருக்கின்ற F.C.P. 13 A.P. 367 ஆம் கள பத்திரத்தில்/ - அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்க காணி துண்டு பிரித்தல் பிம்புரவில்/- அவர்களினால தயாரிக்கப்பட்ட - வரைபடத்தில் 7475 ஆம் இலக்க காணித்துண்டு என்று காட்டப்பட்டுள்ளதும் 0.1900 ஹெக்டயார் றூட் - பேர்ச்சஸ் - விசாலமானதுமான கீழ்க்காணும் எல்லைகளை உடையதுமான அரச காணி.

வடக்கு : 7474 ஆம் இலக்க காணித்துண்டு;
கிழக்கு : 7527 ஆம் இலக்க காணித்துண்டு;
தெற்கு : 7476 மற்றும் 7479 ஆம் இலக்க காணித்துண்டுகள்;
மேற்கு : 7473 ஆம் இலக்க காணித்துண்டு.

P. G. நொயெல் ஜயசிறி,
வதிவிட திட்ட முகாமையாளர்
C வலயம், தெஹிஅத்தகண்டிய.

2024, யூலை 01.

08 - 06/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் துணை பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

மகாவலி அதிகார சபை, பொலன்னறுவை மாவட்டம், திம்புலாகலை பிரதேச செயலாளர் பிரிவு" மகாவலி C வலயத்தின் வதிவிட திட்ட முகாமையாளர் பாடி கமகே நொயெல் ஜியசிறி ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் துணை பிரிவின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2017.03.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள PO/C/SIRI/D/31244 (நீர்பாய்ச்சல்)

ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான இல. 30, ரத்மள்கண்டிய, தெஹிஅத்தகண்டிய எனும் முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்செலாகே ஜயதிலக்க பண்டார என்பவருக்கு வழங்கப்பட்டு பொலன்னறுவை மாவட்ட பதிவாளர் காரியாலயத்தில் LDO/J/59/121 ஆம் இலத்தின் கீழ் 2018.05.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் துணை அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளர் ஆவதற்கு சட்டரீதியான உரித்துடைய ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தும் அவர் பின்னுரிமைக்காரர் ஆவதற்கு விருப்பம் இல்லாமை காரணமாக பின்னுரிமைத்துவத்திற்கு நியமிப்பதற்கு ஒருவர் இல்லை என்று அறிக்கை இடப்பட்டிருப்பதனால் மேற்கூறப்பட்ட அளிப்பு பத்திரத்தினை மேற்காணும் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அதுபற்றி 2024.08.23 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை**

பொலன்னறுவை நிர்வாக மாவட்டத்தில் திம்புலாகலை பிரதேச செயலாளர் பிரிவின் எகொடத்து/கோரளை முந்துன்கம கிராம சேவையாளர் பிரிவின் ரத்மள்கண்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவரது பெறுப்பில் இருக்கின்ற F. C. P. 13 A. P. 367 ஆம் கள பத்திரத்தில்/- அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்க காணி துண்டு பிரித்தல் பிம்புரவில்/- அவர்களினால் தயாரிக்கப்பட்ட - வரைபடத்தில் 7453 ஆம் இலக்க காணித்துண்டு என்று காட்டப்பட்டுள்ளதும் 1.037 ஹெக்டயர் றூட் - பேர்ச் - விசாலமானதுமான கீழ்க்காணும் எலலைகளை உடையதுமான அரச காணி.

வடக்கு : 7440 ஆம் இலக்க காணித்துண்டு;
கிழக்கு : 7439 ஆம் இலக்க காணித்துண்டு;
தெற்கு : 7454 மற்றும் 7479 ஆம் இலக்க காணித்துண்டுகள்;
மேற்கு : 7441 ஆம் இல்க காணித்துண்டு.

P. G. நொயெல் ஜயசிறி,
வதிவிட திட்ட முகாமையாளர்
C வலயம், தெஹிஅத்தகண்டிய.

2024, யூலை 01.

08 - 06/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75050.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L8/TR/3/2/20/ii.

**அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

அநுராதபுர மாவட்டம், திரப்பனே பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 555, லபுனோருவ கிராம அலுவலர் பிரிவின் லபுனோருவ கிராமத்தின் நில வரைபட இலக்கம் 10082 இன் துண்டு இலக்கம் 01 இன் இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 15 ஏக்கர், 32.2 பேர்ச் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு பரமத்த பவுன்டேசன்ஸ் (கரன்ட்) லிமிடட் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு**:

வடக்கு : அரச காணி;
கிழக்கு : பாதை ஒதுக்கம்;
தெற்கு : பாதை ஒதுக்கம்;
மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2024.06.07 முதல் 2054.06.06 வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் அதிகாரிக்கப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் அதிகரிக்கப்படாத பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து

வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்.**- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/உதவிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2024.06.07 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகையோ அல்லது கைமாற்றமோ அனுமதிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”,
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, ஓகத்து 01.

08 - 68

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2024***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | .. | வெள்ளி | 02.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2024 |
| | | வெள்ளி | 09.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2024 |
| | | வெள்ளி | 16.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2024 |
| | | வெள்ளி | 23.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2024 |
| | | வெள்ளி | 30.08.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2024 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2024 |
| | | வெள்ளி | 13.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2024 |
| | | வெள்ளி | 20.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2024 |
| | | வெள்ளி | 27.09.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2024 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.09.2024 |
| | | வெள்ளி | 11.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2024 |
| | | வெள்ளி | 18.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2024 |
| | | வெள்ளி | 25.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2024 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.